## தலைப்பு 259 - மாத்தளை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியில் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1. மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) மாத்தளை பிரதேச செயலகம்

(ஆ) உக்குவெல பிரதேச செயலகம்

(இ) ரத்தொட பிரதேச செயலகம்

(ஈ) லக்கல பல்லேகம பிரதேச செயலகம்

(உ) வில்கமுவ பிரதேச செயலகம்

(ஊ) பள்ளேபொல பிரதேச செயலகம்

(எ) யடவத்த பிரதேச செயலகம்

(ஏ) தம்புள்ள பிரதேச செயலகம

(ஐ) நாவுல பிரதேச செயலகம்

(ஒ) கலேவெல பிரதேச செயலகம்

(ஓ) அம்பன்கங்க கோரளை பிரதேச செயலகம்

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 480.83 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 479.77 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்ட செயலகத்தின் தேறிய நிதியேற்பாட்டிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 1.06 மில்லியன் ஆக இருந்ததுடன் அது தேறிய நிதியேற்பாட்டில் 0.22 சதவீதமாக காணப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டுடெழுபவை | 429.58 | 429.48 | 0.10 | 0.02 |
| மூலதனம் | 51.25 | 50.29 | 0.96 | 1.87 |
| **மொத்தம்** | **480.83** | **479.77** | **1.06** | 0.22 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 27 ஏனைய அமைச்சுக்களிலிருந்தும் 21 திணைக்களங்களிலிருந்தும் ரூபா 3,097.89 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த நிதிஏற்பாட்டில் ரூபா 2,741.40 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 356.49 மில்லியனான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2. முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 25901 | 38.0 | 37.4 | 27.0 | 25.7 | 150.0 | 126.2 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 202.7 மில்லியனாக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3.1 ஆம் பந்தியிலிருந்து 3.13 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. தலைப்பு 259 - மாத்தளை மாவட்டச் செயலகம்**

**எல்லைகளைப் பின்பற்றாமை**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்குரிய பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 27,000,000 ஆக இருந்த போதிலும், ரூபா 1,274,013 ஆல் அந்த எல்லை அடையப்பெற்றிருக்கவில்லை.

**3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

2014 ஆம் ஆண்டின் போது மாவட்டச் செயலகத்திற்கு 27 ஏனைய அமைச்சுக்களிடமிருந்தும் 21 திணைக்களங்களிடமிருந்தும் ரூபா 3,097.89 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு கிடைக்கப்பெற்றிருந்ததுடன், இந்த நிதிஏற்பாட்டில் ரூபா 2,741.40 மில்லியன் அதாவது 88 சதவீதமான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 1,610,191,940 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 1,372,487,945 ஆன நிதிஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட ‘‘2014 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பான கைநூலில்‘‘ குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்காமல் மாவட்டச் செயலகம் உட்பட 09 பிரதேச செயலகங்களினால் ரூபா 278,384,336 தொகையான 463 செயற்திட்டங்கள் தொடர்வேலையாக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தலைப்பு 105, பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து வெவ்வேறு செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 42,021,979 கூட்டுத்தொகையான 10977 பொருள் அலகுகள் 11 பிரதேச செயலகங்களில் 06 மாதங்களுக்கு அண்மித்த காலப்பகுதியில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது வீதிகளுக்கு காபட் இடும் செயற்திட்டத்தின் கீழ் அரச பொறியயிலாளர் கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தப்பட்ட ரூபா 294,090,247 பெறுமதியான 08 மாகாண வீதிகளுக்கு காபட் இடும் செயற்திட்டங்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்வேலையாக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மண் சரிவு பாதிப்பிற்குட்பட்ட பிரதேச மக்களுக்கு புதிதாக வழங்கப்பட்ட காணிகளுக்கு நீர் வசதிகளை வழங்குவதற்காக கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 மே 27 ஆந் திகதி ரத்தொட பிரதேச செயலகத்திற்கு ரூபா 2,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படாமையால் மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஊ) தம்புள்ள பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த கலோகஹேல வாரச்சந்தை அமைந்துள்ள காணி அரசினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த வாரச்சந்தை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் அரசிற்கு முறையாக மாற்றப்படாத தம்புள்ள பிரதேச செயலகத்தினால் ரூபா 1,550,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வெலன்கல்ல விளையாட்டரங்கின் அபிவிருத்தி வேலைகள் திருப்திகரமாக

பூர்த்தி செய்யப்படாமையால் விளையாட்டரங்கைப் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் மாத்தளை மாவட்ட செயலகத்திற்கும் 02 பிரதேச செயலகங்களுக்கும் 07 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 03 அமைச்சுக்களிடமிருந்தும் திணைக்களமொன்றிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற ரூபா 2,092,253 ஆன நிதி ஏற்பாடுகளை குறித்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமையால் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஐ) 2014 ஆம் ஆண்டின் போது அமைச்சொன்றிடமிருந்தும் 02 திணைக்களங்களிடமிருந்தும் 05 செலவினத் தலைப்புகளின் கீழ் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,031,431 நிதி ஏற்பாடுகளானது ரூபா 323,831 இனால் விஞ்சி செலவிடப்பட்டிருந்தன. மேலதிகமாக செலவிடப்பட்ட பெறுமதிக்கான செலவின விடயங்களை இனங்காண முடியாதிருந்தது. மேலும், மேலதிக செலவினம் உரிய அமைச்சு மற்றும் திணைக்களங்களிடமிருந்தது. மீள்நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

---

2 வருடங்களைக் கடந்த (காணி வைப்புக்களைத் தவிர) ரூபா 3,598,556 ஆன 68 வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

---

25901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 726,306 ஆக இருந்தது. அந்த நிலுவையாக இருந்த மீதிகள் 01 ஆண்டு முதல் 13 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு உரியதாக இருந்ததுடன், அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டன.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் இடர் கடன் கொடுப்பனவின் போது பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் எல்லையை மிகைத்து ரூபா 130,300 ஆன கடன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தரொருவர் இடமாற்றம் பெற்று 03 மாதங்களுக்குள் அக்கடன் தீர்த்து வைக்கப்பட வேண்டும். எனினும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் 06 மாதங்கள் முதல் 08 மாதங்கள் வரையான காலமாக நிலுவையாக இருந்த ரூபா 184,760 தொகையான 03 கடன் மீதிகள் இணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1,673,219 செலவில் வில்கமுவ பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பத்கம்பல அரிசி தயாரிக்கும் நிலையம் பல சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் தனியார் வர்த்தகரொருவருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முடியாதிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம், களம், நீர்த்தாங்கி மற்றும் அரிசி உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 இயந்திரங்கள் விளைவற்றும் அழிவடையும் நிலைக்குட்பட்டிருந்தமை காரணமாக செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்த செலவினமும் பயனற்ற செலவினமாகியிருந்தது.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தினால் தீர்க்கப்படாத ஓராண்டிற்கு குறைவான காலமாக இருந்து வரும் ரூபா 1,421,010 ஆன பொறுப்புக்கள் காணப்பட்டன. இரண்டு செலவின விடயங்களுரிய ரூபா 52,533

கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இணங்காமைகள்

### வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

### பெறுமதி சேர் வரி கொடுப்பனவு

அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக 06 பிரதேச செயலகங்களினால் 26 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 157,058 ஆன பெறுமதி சேர் வரி தொடர்பான அறிக்கை கொடுப்பனவு செய்த மாதத்திற்கு பின்னர் வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 உள்நாட்டு நிதியீட்டங்களின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதில் தாமதங்கள் தொடர்பில் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டங்களைப் ஆரம்பிக்காது கைவிடுதல்

பள்ளேபொல மற்றும் உக்குவல பிரதேச செயலகங்களினால் ரூபா 2,500,000 செலவில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 7 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

தம்புள்ள பிரதேச செயலகத்தினால் பலாத் நெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இனாமலுவ கிராம சிறுவர் மற்றும் தாய் சிகிச்சை நிலையத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 2,000,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் அதற்காக ரூபா 1,477,149 ஆன பட்டியல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 17 ஆம் இலக்கம் முதல் 25 ஆம் இலக்கம் வரையான வேலை விடயங்கள் பூர்த்தி

செய்யப்படாதிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2015 சனவரி 10 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் கையளிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஏப்ரல் 09 ஆந் திகதி வரை அது கையளிக்கப்படாதிருந்தமை நிலையப் பரிசோதயையின் போது அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் வேலையை நிறைவு செய்யாமை தொடர்பாக தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயன்முன்னேற்றமில்லாத செயற்திட்டங்கள்**

---

நிர்மாணம் தொடர்பாக இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் வேறு திணைக்களமொன்றுக்கும் உரிய முழுத் தொகையோ அல்லது பகுதியொன்றோ விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், வேலை தொடர்பான உரிய முன்னேற்றமொன்று அறிக்கையிடப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உக்குவல பிரதேச செயலகத்தினால் 2 செயற்திட்டங்களின் கீழ் மின்சார நீடிப்பினை வழங்குவதற்காக இலங்கை மின்சார சபைக்கு 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 617,824 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் மாதம் வரையிலும் மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பலாத் நெகும செயற்திட்டத்தின் கீழ் உக்குவல பிரதேச செயலகத்திற்குரிய கல உடஹேனகம மற்றும் பிறண்டிகல ஆகிய பிரதேசங்களை சுற்றுலா வலயமொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது அதற்காக ரூபா 5,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அடிப்படை பூங்கா நடவடிக்கைகளுக்காக தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்திற்கும் ஏனைய நடவடிக்கைகளுக்காக இன்னொரு வெளி தரப்பினருக்கும் மொத்தம் ரூபா 1,311,652 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 யூன் மாதம் வரையிலும் எவ்வித நிர்மாண நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மாத்தளை மடவள உல்பத் பிரதேசத்தில் குடிநீர் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக மாத்தளை பிரதேச செயலகத்தினால் ரூபா 1,957,201 தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதி மற்றும் 2014 திசெம்பர் 12 ஆந் திகதி

கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 யூன் மாதம் வரையிலும் அச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.8 செயலாற்றல்

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) பிரதான பணிகளுக்கு முராணான செயற்பணிகள்

காட்டு உயிரினங்களால் பொது மக்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைத்தல் மற்றும் தவிர்த்தல் என்பவற்றை அடிப்படை நோக்கமாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ‘‘காடாக்கல் மற்றும் வனப் பாதுகாப்பு’’ நிகழ்ச்சித்திட்டம் அந்நோக்கங்களுக்கு இணங்காதவகையில் தம்புள்ள மற்றும் கலேவல பிரதேச செயலகங்களினால் முறையே தல்கோட்டை மற்றும் பிப்பிதுனு ஆகிய கிராமங்களில் 2 வனசீவராசிகள் அலுவலகங்களையும் 2 விடுதிகளையும் நிர்மாணிப்பதற்கு ரூபா 9,500,000 தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக ரூபா 1,773,215 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### (ஆ) போதியளவில் நிறைவேற்றப்பட்டிராத பிரதான பணிகள்

மாவட்ட செயலகத்தினால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 2014 ஆம் ஆண்டின் போது ரத்தொட பிரதேச செயலகத்தினால் புதிய கட்டிமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 10,000,000 தொகையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 8,744,186 தொகை செலவிடப்பட்டு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும். 2015 யூலை மாதம் வரையிலும் கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டின் ‘‘பலாத் நெகும நிகழ்ச்சித்திட்டத்தின்’’ கீழ் உக்குவல பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட விவசாயிகளையும் தோட்ட ஊழியர்களையும் வெயிலிலும் மழையிலும்

பாதுகாப்பதற்கு தலைக் கவசங்களை வழங்குவதற்காக ரூபா 910,000 தொகை செலவு செய்து தேசிய கைப்பணிகள் மன்றத்திடமிருந்து 1400 ஓலைத் தொப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பயனாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படாமல் 2015 யூன் மாதம் வரையிலும் அலுவலக வளவில் பாதுகாப்பற்ற விதத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(iii) உக்குவல பிரதேச செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது பாடசாலைகளுக்கு பகிர்நதளிப்பதற்காக ரூபா 95,600 தொகை செலவு செய்து 16 மேளங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2015 யூன் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது ரூபா 65,725 பெறுமதியான 11 மேளங்கள் எலித்தொல்லையால் சேதமடைந்திருந்தன.

**(இ) திட்டமிடல்**

-------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்ட செயலகத்திற்குரிய விவசாய பிரிவின் மூலம் 2014 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த ‘‘பழக் கிராம நிகழ்ச்சித்திட்டம்’’ செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது 500 பெரிய வெங்காய களஞ்சியங்கள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் மூலம் அதில் 357 களஞ்சியங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------

பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) வில்கமுவ பிரதேச செயலகத்தினால் கரவ்கஹவெவ சந்தைக்கு அருகாமையிலிருந்து போகஹவெவ எல்லை வரையான வீதிக்கு கிரவல் பரப்புவதற்காக ரூபா 1,000,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், புதிதாக கிரவல் இடப்பட்டமைக்கு எவ்வித சான்றும்

சமர்ப்பிக்கப்படாதிருக்கையில் இந்நிர்மாணத்திற்காக ரூபா 574,412 தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 அபிவிருத்தி முன்மொழிவின் கீழ் ரூபா 5,000,000 ஆன நிதிஏற்பாட்டில் சீகிரிய பொல்லத்தாவ வீதிக்கு தார் ஊற்றுவதற்கான நிர்மாண வேலைகள் சமூக அடிப்படையிலான சங்கத்திற்கு நேர் ஒப்பந்த கையளிப்பு முறைமையின் கீழ் வழங்க முடியாத போதிலும், 2014 யூன் 04 ஆந் திகதி முதல் 2014 யூலை 25 ஆந் திகதி வரையான காலத்தில் 3 கட்டங்களாக பிரித்து ஒப்பந்தம் ஒரே விவசாய அமைப்பிற்கு வழங்கப்பட்டிருந்தது. அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.9.1 அம் வழிகாட்டி மற்றும் 2011 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 452 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் கூறுவிலை கோரப்பட்டு பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டிருகக்வில்லை.

## 3.10 இழப்புக்கள் மற்றும் சேதங்கள்

2014 ஆம் ஆண்டில் 05 விபத்துக்களால் ரூபா 689,486 பெறுமதியான நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. அந்த நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பதிவேடுகளிலிருந்து பதிவழிப்பதற்கோ 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

உக்குவல பிரதேச செயலகத்திற்குரிய அல்கடுவ நகரில் விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. தோட்டக் கம்பனியொன்றுக்குரிய செழிப்பான தேயிலை பயிர் செய்யுமிடம் இவ்விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக அதற்காக தோட்டக் கம்பனிக்கு ரூபா 900,000 இழப்பீடாக செலுத்த நேர்ந்திருந்தது. 2014 திசெம்பர் 19 ஆந் திகதி வரையிலும் இச் செயற்திட்டத்திற்காக ரூபா 2,606,284 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் மாதம் வரையிலும் விளையாட்டு மைதானத்தை அமைக்கும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. அவ்வாறே 2015 யூன் 09 ஆந் திகதி அளவில் ஒப்பந்தக்காரரின் காப்புறுதியும் விடுவிக்கப்பட்டிருந்தது.

**3.12 முகாமைத்துவ பலவீனங்கள்**

அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 44 சந்தர்ப்பங்களின் போது மாத்தளை, பள்ளேபொல, உக்குவெல, தம்புள்ள மற்றும் நாவுல பிரதேச செயலகங்களினால் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அந்த கையேற்பு நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.13 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தினதும் 11 பிரதேச செயலகங்களினதும் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 41 | 25 | 16 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 34 | 23 | 11 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 890 | 804 | 86 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 118 | 111 | 07 |
| | மொத்தம் | 1,083 | 963 | 120 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 120 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்ட செயலகத்தில் முறையான இடமாற்றக் கொள்கையொன்று செயற்படுத்தப்படாத காரணத்தினால் மாத்தளை மாவட்டத்திற்குரிய வில்கமுவ மற்றும் லக்கல பல்லேகம போன்ற கஷ்ட

பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களில் 09 பதவிகளில் 37 வெற்றிடங்கள் காணப்பட்டன.

**(ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

லக்கல பல்லேகம பிரதேச செயலகத்தில் பொருளதார அபிவிருத்தி அமைச்சினால் இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக 18 வெற்றிடங்கள் காணப்படும் போது ஒரு உத்தியோகத்தர் 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அத்திகதியிலிருந்து பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சிலிருந்து சம்பளம் மீள்நிரப்பப்பட்டிருந்தது.